எம்.சி.ஓபி.எண் : 7348/18 தேதி: 20/12/2024

எமசா : 1

பெயர் : ஜவகர்

த/பெயர் : செந்தமிழச்செல்வன்

வயது : 34

<u>**மனுதாரரின் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

முதல் தகவல் அறிக்கை லாரியின் உரிமையாளார் பெயரில் தான் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்தின் போது லாரியின் உரிமையாளராக 19.6.2017 என்று உள்ளது. எனது பிரான வாக்குமூலத்தில் பத்தி 4ல் லாரி சுதாகர் என்பவர் பெயரீல் தான் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்திற்கு பிறகு லாரியானது மேற்படி சுதாகர் பெயருக்கு மாற்றம் செய்யபட்டுள்ளது. பாலகங்காதர திலக் என்பவர் பெயரானது லாரியின் உரிமையாளர் என்று 7.9.2010 லிருந்து 12.6.2017 உள்ளது. சுதாகர் என்பவர் பெயரில் 19.6.2017 முதல் உள்ளது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் யார் பெயரில் இருந்தது என்றால் யார் பெயரிலும் இல்லை . 19.6.2017 பாலகங்காதர திலக் என்பவர் பெயரில் தான் இருந்தது. விபத்தின் போது மேற்படி லாரிக்கு 3வது தரப்பு இன்சுரன்ஸ் இருந்தது என்றால் சரியல்ல. Liability Only Policy தான் இருந்தது. எங்களது எதிர் உரையில் அவ்வாறு சொல்லியுள்ளோம் என்றால் நாங்கள் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்று சொல்லியுள்ளோம். இந்த விபத்தானது போக்கிலின் இயந்திரதை லாரியில் ஏற்றும் போது லாரியின் ஓட்டுநர் லாரியை இயக்கியததால் தான் போக்கிலின் இயந்திரம் கீழே விழுந்து மனுதாரின் கால் துண்டிக்கப்பட்டது என்று முதல் தகவல் அறிக்யையில் உள்ளது என்றால் சரியல்ல. போக்கிலின் இயந்திரத்தின் உரிமையாளர் யார் என்று தெரியாது. எங்களது நிறுவனம் லாரிக்கு மட்டும் தான் காப்பீடு தரப்பட்டுள்ளது. எங்களது காப்பீடு நிறுவனம் மனுதாரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க கூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.